# JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU

## CC No. 77/2014

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : LW-3/PW-4 |
| Name | : வசந்த் |
| Father/Husband's Name | : சுப்பிரமணி |
| Village | : புளிப்பாக்கம் |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.08.2024.

**முதல் விசாரணை–**

நான் தற்போது திருப்போரூர் அருகிலுள்ள கீழுர் கனரா வங்கியில் சப் ஸ்டாப் ஆக பணி செய்கிறேன். கடந்த 2009 முதல் 2017 வரையில் செங்கல்பட்டு பரனூர் டோல்கேட்டில் சூப்பார் வைசராக வேலை செய்தேன். 17.09.2013 ஆம் தேதி மதியம் சுமார் 1 மணிக்கு டோல்கேட்டில் வேலை செய்த பகவத்குமார் என்பவர் வேலை செய்தார். மேற்படி மதியம் 1 மணிக்கு செங்கல்பட்டு- தாம்பரம் நோக்கி வந்த டுரிஸ்ட் வேனை பகவத்குமார் கையை காட்டி மடக்கியபோது டோல்கேட்டில் நிற்காமல் சென்றுவிட்டது. மேற்படி பகவத்குமார் செங்கல்பட்டு - தாம்பரம் நோக்கி வந்த இருசக்கர வாகனத்தில் லிப்ட் கேட்டு நிற்காமல் சென்ற வேனை நோக்கி பின்தொடர்ந்து சென்றார். நானும், பழனியும் இருசக்கர வாகனத்தில் , பகவத்குமாரை பின்தொடர்ந்து சென்றோம்.

RTO அலுவலகம் அருகே வந்தபோது மேற்படி நிற்காமல் சென்ற வேனை வழிமறித்து நாங்கள் மூவரும் நிற்காமல் சென்றதைப் பற்றி மேற்படி வேன் டிரைவரிடம் விசாரித்து கொண்டிருந்தோம். அப்போது செங்கல்பட்டிலிருந்து தாம்பரம் நோக்கி வந்த இண்டிகா கார் ஒன்று செக்யூரிட்டி பகவத்குமார் மீது மோதி, அவர் தூக்கி வீசப்பட்டு மேற்படி காரின்மீது விழுந்தார். அவருக்கு தலை மற்றும் உடல் முழுவதும் காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். இடித்த இண்டிகா காரின் பதிவெண் தெரியாது. விபத்து திடீரென நடந்ததால் பதிவெண்ணை கவனிக்கவில்லை. மேற்படி இண்டிகா காரினை அதிவேகமாக ஓட்டி வந்த நபர் ஆஜர் எதிரி. மேற்படி இறந்த நபரை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

sd/-xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-R.D. Aarthi
Judicial Magistrate No.II,
Chengalpattu.